**கிராமின் கிருஷி ம aus சம் சேவா**
இந்தியா வானிலை ஆய்வு துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 08-02-2022**

**திருவள்ளூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2022-02-08 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2022-02-09 | 2022-02-10 | 2022-02-11 | 2022-02-12 | 2022-02-13 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ) | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| டிமாக்ஸ் (° C) | 33.0 | 33.0 | 32.0 | 32.0 | 32.0 |
| டிமின் (° C) | 23.0 | 23.0 | 23.0 | 23.0 | 24.0 |
| RH I (%) | 75 | 75 | 75 | 75 | 75 |
| RH II (%) | 55 | 55 | 55 | 55 | 55 |
| காற்றின் வேகம் (கிமீ) | 6.0 | 6.0 | 6.0 | 6.0 | 6.0 |
| காற்று இயக்கம் (பட்டம்) | 110 | 110 | 90 | 70 | 70 |
| மேகக்கணி (ஆக்டா) | 2 | 1 | 1 | 1 | 1 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் ஐந்து நாட்களுக்கு வானம் வறண்ட வானிலையாக காணப்படலாம்; காற்றின் வேகம் மணிக்கு சுமார் 6.0 கி.மீ என்றளவில் வீசக் கூடும்; காற்றின் திசையானது கிழக்கு வடகிழக்கு முதல் தெற்கு தென்கிழக்கு நோக்கி வீசக்கூடும்; அதிகபட்ச வெப்பநிலை முறையே 32.0°C-33.0°C-ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை முறையே 23.0-24.0°C-ஆகவும் எதிர் பார்க்கலாம்; காலை நேரங்களில் நிலவும் காற்றின் ஒப்பு ஈரப்பதம் முறையே 75%-ஆகவும் மற்றும் மாலை நேரங்களில் நிலவும் காற்றின் ஒப்பு ஈரப்பதம் முறையே 55%-ஆகவும் காணப்படலாம்.

## பொது ஆலோசனை:

13.02.2022 முதல் 19.02.2022 வரை தமிழ்நாட்டில் மழைப்பொழிவு எதிர்பார்க்கப்பட்ட இயல்பு நிலை மழைப்பொழிவு விட குறைவாகவும், அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பாகவும் இருக்கும்.

## எஸ்எம்எஸ் ஆலோசனை:

விவசாயிகள் மண்ணின் ஈரத்தன்மையை பொறுத்துத் பயிர்களுக்கு நீர் பாசனம் மேற்கொள்ளவும்.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| அரிசி | நெல்- நாற்றங்கால் பருவம்- 1. பச்சைத் தத்துப்பூச்சி- 20 செண்ட் பரப்பு கொண்ட நாற்றங்காலுக்கு கார்போஃபுரான் 3% CG 3.5 கிலோ கிராம் வீதம் தூவலாம். மற்றும் நாற்றங்காலில் 2.5 சென்டிமீட்டர் மேல் நீர் தேங்க வண்ணம் பார்த்துக்கொள்ளவும்; 2. இலைப்பேன்- 20 சென்ட் பரப்பு கொண்ட நாற்றங்காலுக்கு தியாமெதோக்ஸாம் 25% WG 4 கிராம் வீதம் 40 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்; 3.சுருள் ஈ /குருத்து ஈ- பைப்ரினில் 5% SC 400-600 கிராம் வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். |
| அரிசி | நெல்- நடவு முதல் வேர் தூர் கட்டும் நிலை- 1.தண்டுத் துளைப்பான் (காய்ந்த நடுக்குருத்து)- ஏக்கருக்கு அசாடிராக்ட்டின் 0.03% 400 மில்லி லிட்டர் வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். அல்லது ஏக்கருக்கு ப்ளூபெண்டியாமைடு 20% WP 50 கிராம் வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும் அல்லது ஏக்கருக்கு குளோரான்ட்ரினிலிப்ரோல் 18.5 SC 60 மில்லி லிட்டர் வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்; 3.பச்சை தத்துப்பூச்சி- ஏக்கருக்கு இமிடகிலோபிரிட் 17.8% SL 40-50 மில்லி லிட்டர் வீதம் தண்ணீரில் கலந்து தெளிக்கவும் அல்லது ஏக்கருக்கு தியாமேதாக்சாம் 25% WG 40 கிராம் வீதம் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.மற்றும் மின்விளக்கு பொறி அமைத்து தத்துப்பூச்சியின் தாக்கத்தை கட்டுப்படுத்தலாம்; 4.இலை சுருட்டுப்புழு- ஏக்கருக்கு அசிபேட் 400 மில்லி லிட்டர் வீதம் அல்லது ஏக்கருக்கு அசாடிராக்ட்டின் 0.03% 400 மில்லி லிட்டர் என்ற வீதம் 200 மில்லி லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்; 5. பசும் பாசி வளர்ச்சி- ஏக்கருக்கு காப்பர் சல்பேட் 1 கிலோ கிராம் வீதம் பாசன நீரில் கலந்து விடவும். |
| கருப்பு கிராம் | உளுந்து- இலைப்பிணைக்கும் புழு: ஏக்கருக்கு தியோடிகார்ப் 75 WP 250 மில்லி லிட்டர் வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும் (அல்லது) ஏக்கருக்கு ப்ளூபெண்டியாமைடு 39.35% SC 40 கிராம் வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். |
| கிரீன் கிராம் | பச்சை பயிறு- மஞ்சள் தேமல் நோய் (வெள்ளை ஈ)- ஏக்கருக்கு டைம்தோயேட் 30 EC 200 மில்லி லிட்டர் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.ஏக்கருக்கு தியாமெதொக்சாம் 75 WG @ 40 கிராம் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்; 2.குருத்து இலை பிணைக்கும் புழு- ஏக்கருக்கு தியோடிகார்ப் 75 % WP 250 கிராம் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்; அல்லது ஏக்கருக்கு ஃப்ளூபெண்டாமைடு 39.35% SC 40 மில்லி லிட்டர் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். |
| நிலக்கடலை | நிலக்கடலை- 1. டிக்கா இலைப்புள்ளி நோய்- ஹெக்சாகானஸ்சால் (0.2%) 1 லிட்டர் தண்ணீருக்கு 2 மில்லி லிட்டர் வீதம் கலந்து தெளிக்கவும் அல்லது வேப்பங்கொட்டை சாறு 5% 1 லிட்டர் தண்ணீருக்கு 15 மில்லி லிட்டர் வீதம் கலந்து தெளிக்கவும்; 2.நிலக்கடலையில் பூவை தக்க வைத்தல், நெற்று நிரப்புதல் மற்றும் வறட்சியைத் தாங்கும் தன்மையை அதிகரிக்க விதைத்த 35-ம் நாள் (50 சதவிகத பூக்கும் சமயத்தில்)இரண்டு தெளிப்பாக நிலக்கடலை ரிச் எக்டருக்கு 5.0கிகி (ஒவ்வொரு தெளிப்பிற்கும்) மற்றும் விதைத்த 45-ம் நாள் (காய் முற்றும் பருவம்) 500 லிட்டர் தண்ணீர் பரிந்துரைக்கப்படுகிறது; 2. சுருள்பூச்சி- ஏக்கருக்கு மெத்தில் டெமெக்டோன் 25 EC 400 மில்லி லிட்டர் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். இரவு 8 முதல் 11 மணி வரை விளக்கு பொறியினை ஒளிர செய்து கவர்ந்து அழிக்கலாம். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கத்திரிக்காய் | கத்தரி- 1.வெள்ளை ஈ- வேப்பண்ணெய் 3 சதம் என்றளவில் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம் அல்லது தியாமேதோக்சாம் 25% WG 10 லிட்டர் தண்ணீருக்கு 4 கிராம் வீதம் கலந்து தெளிக்கலாம். ஏக்கருக்கு 5 முதல் 6 எண்ணிக்கையிலான மஞ்சள் வண்ண ஒட்டும் பொறியினை அமைக்கலாம்; 2. காய்த் துளைப்பான்-வேப்பங்கொட்டை சாறு 5 சதம் அல்லது டைமெத்தோயேட் 30 % EC 10 லிட்டர் தண்ணீருக்கு 7 மில்லி லிட்டர் வீதம் கலந்து தெளிக்கவும்.மற்றும் ப்ரைஸ்டோமரஸ் டெஸ்டுசியஸ் மற்றும் செராமஸ்டஸ் பெலவோரிப்டெலில் ஒட்டுண்ணியைக் கொண்டு கட்டுப்படுத்தலாம். |
| மிளகாய் | மிளகாய்- இலைப்பேன்- இமிடகிலோபிரிட் 17.8% SL 10 லிட்டர் தண்ணீருக்கு 3 மில்லி லிட்டர் வீதம் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம் அல்லது பைப்ரோனில் 5% SC 0.6 1 லிட்டர் தண்ணீருக்கு 1.5 மில்லி லிட்டர் வீதம் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். |
| மாம்பழம் | மாமரம்- தத்துப்பூச்சி- தியாமெதோக்சம் 25WG 10 லிட்டர் தண்ணீருக்கு 1.0 கிராம் வீதம் அல்லது புப்ரோஃபெசின் 25 SC 1 லிட்டர் தண்ணீருக்கு 1.0 மில்லி லிட்டர் வீதம் கலந்து தெளிக்கலாம். மற்றும் வேப்பெண்ணைய் 1 லிட்டர் தண்ணீருக்கு 5 மில்லி லிட்டர் வீதம் கலந்து மேற்கொண்ட பூச்சி கொல்லி மருந்துடன் கலந்து தெளிக்கலாம். பூக்கள் பூக்க தொடங்கியவுடன் முதல் தெளிப்பும் இரு வார இடைவெளிக்கு பின் இரண்டாம் தெளிப்பினை மேற்கொண்டு தத்துப்பூச்சி தாக்கத்தினை கட்டுப்படுத்தலாம். |
| தேங்காய் | தென்னை- சுருள் வடிவ வெள்ளை ஈ- 1. ஏக்கருக்கு என்கார்சீய குவாடலூபே ஒட்டுண்ணிகளை @ 100 வீதம் விடலாம்; 2.ஆமணக்கு எண்ணெய் பூசிய மஞ்சள் நிற ஒட்டு பொறியினை ஏக்கருக்கு 5 வீதம் அமைத்து பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம்; 3.இளந்தென்னைகளுக்கு ஏக்கருக்கு கிரைசோபர்லா ஜாஸ்ட்ரோவி சில்லம் முட்டைகளை @ 500 வீதம் விடலாம். |